23rd March 1961]

Sri N. MARUDACHALAM : கோவையில் நொய்யல் நதிக்கரையில் தென்னந் தோப்புகள் அதிகமாக இருக்கிறது. சில சமயங்களில் அங்கே தண்ணீர் அடித்துக் கொண்டு போய் தென்னந் தோப்பு சேதப் படுத்தப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் இதற்கு வேண்டிய பாதுகாப்பு சுவர் கட்டி அங்கு இருக்கும் தென்னை மரங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க உத்தரவிடுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தென்னை மரத்திற்கு ஈரம் வேண்டும். தென்னை மரம் கடலோரத்தில் இருந்தால் நல்லது. கடலோரம் கோவையில் இல்லை. நொய்யல் போன்ற ஆற்று ஓரங்களில் தென்னை மரங்கள் இருந்தால், அதனுடைய சொந்தக்காரர்கள் அதற்கு என்ன பாதுகாப்பு வேண்டுமோ அதில் முதலில் அக்கறை எடுத்துக் கொண்டு, பிறகு தெரிவித்தால் விவசாய இலாகா அதைக் கவனித்து எத்தகைய உதவி கொடுக்க முடியுமோ, அல்லது எத்தகைய யோசனை அளிக்கக் கூடுமோ அதில் கவனம் செலுத்துவார்கள்.

Sri V. SUBBIAH : இராமனுதபுரம் மாவட்டத்தில் தென்னை வளர்ப் பதற்கு மணற்பாங்கான கடலோரம் இருக்கிறது. அந்த நிலையில் இருந்தும் கூட அங்கு "ஈல்டு" அவ்வளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : குறைவாக இருப் பதற்குக் காரணம் விவசாயிகள் போதிய அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பது தான். நான் நேற்றுகூட விடை அளித்தேன், விவரம் கொடுத்து இராமனுதபுரம் மாவட்டத்தில் 10,000 ஏக்கர் நிலத்தில் விவசாய இலாகா கவனம் செலுத்தி தென்னை வளர்ப்பதில் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. நான் சில இடங்களில் விசாரித்தேன். இராமேசு வரம் பிராந்தியத்தில், ராமனுதபுரம் மாவட்டத்தில் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒன்றுமே விளைவிப்பது இல்லை. காட்டு இலாகா வுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ குத்தகைக்குக் கொடுத்து தென்னை அல்லது சவுக்கு வளர்க்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னுல் அதைப் பற்றி அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளுவதில்லை. பேருக்கு 30 ஏக்கர், 50 ஏக்கர் இருந்தால் போதும் என்று அவர்கள் நினைக்கிருர்கள்.

Sri M. A. B. ARUMUGHASAMY : தென்னை மரங்கள் வளர்ப் பதை ஊக்குவிக்கும்பொருட்டு, மழை காலங்களில் ஆற்று ஓரங்களில் ஏற்படும் வெள்ளத்தினுல் உண்டாகக்கூடிய சேதத்தைத் தடுப்பதற்கு, தடுப்புச் சுவர்கள் அமைக்கும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் முறை யில் சர்க்கார் அதற்கு ஒரு குறிப்பிட்ட உதவித் தொகை மூலம் நிவாரணம் அளித்து, விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு முன் வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்கெல்லாம் முதன் முதலாக அடிப்படையிலே விவசாயிகள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் போதியஅக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்ருல், கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் கொஞ்சம் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். அதற்கு மேலே அரசாங்கம் வேண்டியதைச் செய்யும்.

Road to Aravatla Village.

*1013 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகாவில் அரவட்லா என்கிற ஊர் மலையின் மேல் இருப்பதால் அதற்கு வண்டி போக்குவரத்து பாதை சரியாக இல் லாத காரணத்தினுல் மேற்படி ஊர் மக்களுக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் கழுதையின்பேரில் கொண்டுபோகப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா?

[23rd March 1961

(இ) மேற்படி குறையைப் போக்க உடனடியாக ரோடு போட உத்தேச முண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The hon. Member himself has made a representation to the Government in the matter.

(b) The matter is under the consideration of the Government.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த அரவட்லா மலையின் மீது மூன்று கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 1,500 மக்கள் வசிக்கிறார் கள். 100 வருஷங்களுக்கு முன்னால் "க்லோஷர் எரியா" என்கிற முறையில் அது இருந்தது. ஆனால் சமீபத்தில் காடு கண்டிராக்டர் அவருடைய லாபத்தை உத்தேசித்து லாரி போகக் கூடிய அளவுக்கு மலையை உடைத்து ரோடு போட்டிருக்கிறார்கள். அந்த ரோடுக்கு மெட்டல் போட்டு வசதி செய்து கொடுத்தால் போக்குவரத்திற்குச் சௌகரியமாக இருக்கும். மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்லுவதற்கு வசதி யாக இருக்கும். ஆகவே, அதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காட்டு இலாகா ரோடு போட்டிருக்கிறார்கள். தேவைக்கு எவ்வளவு வேண்டுமோ அந்த முறையில் போட்டிருக்கிறார்கள். மெட்டல் போடவில்லை. ஆனால், இதற்கு மெட்டல் போட வேண்டுமானால் ரூ. 1½ லட்சம் செலவாகிறது. ஆகையால், மராமத்து இலாகாவுடன் கலந்து ஆலோசித்து, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்த ரோடு எல்லோருக்கும் உப யோகப் படவேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அதைப்பற்றி காட்டு இலாகாவுக்கு ஆட்சேபணை இராது. எல்லாம் பரிசீலனையில் இருக் கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : சென்ற இரண்டு வருஷ கால மாக மராமத்து இலாகா காட்டு இலாகாவைக் காட்டுகிறது. காட்டு இலாகா மராமத்து இலாகாவைக் காட்டுகிறது. அந்த அளவுக்குத் தான் நிலைமை இருந்து வருகிறது. இரண்டு ஆட்டில் ஊட்டிய குட்டியைப் போல இம் மாதிரி ரோடு வசதி போதுமான அளவுக்கு இல்லாமல் அவஸ்தையாக இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள், இரண்டு பேர்களும் கூடி யோசனை செய்து இதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வர்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு ஆட்டில் ஊட்டிய குட்டி என்று பழமொழி சொல்லுவதற்காக கனம் அங்கத்தினர் இப்படிச் சொல்லவேண்டாம். அப்படி ஒன்றும் தகராறு இல்லை. நான் முன்பே இதை விளக்கினேன். இதற்கு அதிகச் செலவாகிறது. மரா மத்து இலாகா ஏற்றுக் கொள்ளவேண்டும். 1½ லட்ச ரூபாய் செலவு செய்வதென்றால் உடனடியாக எடுத்துக்கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட முடியாது. இதிலே வேண்டிய கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. தகராறு ஒன்றும் இல்லை.

Pests (paddy crops)

* 1014 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether any study and research has been made over the causes and prevention of pests to paddy crops in Lalgudi taluk which is being regularly affected for the past five or six years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No separate study and research of the type mentioned have been made in the Lalgudi area as pests occur wherever paddy is cultivated and as there is nothing peculiar about this area.